தமிழ்நாடு சட்டமன்றப் பேரவை.

1982, மார்ச் 12, வெள்ளிக்கிழமை.

மாசி 28, துன்மதி—திருவள்ளுவர் 2013.

சென்னை செயின்ட் ஜார்ஜ் கோட்டையிலுள்ள சட்டமன்றப் பேரவை மண்டபத்தில் காலை 9-00 மணியளவில் மாண்புமிகு பேரவைத் தலைவர் திரு. க. இராசாராம் அவர்கள் தலைமையில் பேரவை கூடியது.

மாண்புமிகு பேரவைத் தலைவர் :

தீயள வன்றித் தெரியான் பெரிதுண்ணின்
நோயள வின்றிப் படும்.

பசித் தீயின் அளவின்படி அல்லாமல், அதை ஆராயாமல் மிகுதியாக உண்டால், அதனால் நோய்கள் அளவில்லாமல் ஏற்பட்டு விடும்.

1. வினாக்கள்— விடைகள்.

உடுக்குறியிட்ட வினாக்கள்.

மாண்புமிகு பேரவைத் தலைவர் : வினாக்கள் 441, 442, ஆகியவைகள் மாண்புமிகு நிதியமைச்சர் அவர்களின் வேண்டுகோளுக்கிணங்க தள்ளி வைக்கப்படுகின்றன.

இனாம் ஒழிப்புச் சட்டத்தின் கீழ் எடுத்துக் கொள்ளப்பட்ட சிவந்திபுரம் கிராமம்.

*வினா எண் 443—திரு. என். எஸ். வி. சித்தன் : மாண்புமிகு வருவாய்த்துறை அமைச்சர் கீழ்க்கண்ட வினாக்களுக்கு விடையளிப்பாரா—

(அ) திருநெல்வேலி மாவட்டம், அம்பாசமுத்திரம் வட்டத்தில், சிவந்திபுரம் கிராமம் 1966ஆம் ஆண்டு அக்டோபர் மாதம் 1-ம் நாள் முதல் இனாம் ஒழிப்புச் சட்டத்தின்கீழ் எடுக்கப்பட்டும் அந்த சட்டத்தின் பயனை விவசாயிகள் அடைய முடியவில்லை என்பது அரசுக்குத் தெரியுமா?

(ஆ) ஆம் எனில், அதன் விவரம் என்ன?

மாண்புமிகு திரு. எஸ். டி. சோமசுந்தரம் : (அ) தெரியும்.

(ஆ) திருநெல்வேலி மாவட்டம், அம்பாசமுத்திரம் வட்டம், சிவந்திபுரம் கிராமம் இனாம் ஒழிப்புச் சட்டத்தின்கீழ் 1965 ஆம் ஆண்டு ஏப்ரல் மாதம் 15 ஆம் நாளில் அரசால் எடுத்துக் கொள்ளப்பட்டதை எதிர்த்து திருவாடுதுறை ஆதீனம், மதுரை நிலவரித் திட்ட அலுவலர், திருநெல்வேலி இனாம் ஒழிப்பு நடுவர் மன்றம் மற்றும் சென்னை உயர்நீதி மன்றம் ஆகியவைகளில் செய்த மேல்முறையீடுகள் தள்ளுபடி செய்யப்பட்டன. இதன் அடிப்படையில் இக்கிராமத்தில் தன்னிச்சை விசாரணைகள் மேற்கொள்ளப்பட்டு, நிலவரித் திட்டம் 1389 ஆம் பசலியில் அறிமுகப்படுத்தியதோடு தூயக் கணக்குகள் வருவாய்த்துறைக்கு 1980ஆம் ஆண்டு ஜுன் மாதம் 30ஆம் நாளில் ஒப்படைக்கப்பட்டன. மேற்குறித்த சட்ட ரீதியான விசாரணைகளின்போது மதுரை நிலவரித் திட்ட உதவி அலுவலர் பிறப்பித்த ஆணையின் பேரில் சுமார் 215 ஹெக்டேர் பரப்பளவு உள்ள கைப்பற்று நிலங்களுக்கு திருவாடுதுறை ஆதீனத்தின் பெயரில் பட்டா வழங்கப்பட்டுள்ளது. மேற்படி ஆணையை எதிர்த்து திரு. ஆர். பால்சுவாமி மற்றும் 37 நபர்கள் திருநெல்வேலி இனாம் ஒழிப்பு மன்றத்தில் செய்துள்ள மேல்முறையீட்டு மனு, அம்மன்றத்தில் நிலுவையில் இருந்து வருகிறது.

திரு. என். எஸ். வி. சித்தன் : மாண்புமிக்க பேரவைத் தலைவர் அவர்களே, நீண்ட பல ஆண்டு காலமாக இந்த வழக்கு உச்ச நீதிமன்றத்தில் இருக்கின்ற காரணத்தினால், தமிழ்நாடு அரசு முனைந்து இந்த வழக்கை விரைவில் விசாரிப்பதற்கு எடுத்துக் கொள்வதற்கான நடவடிக்கையை மேற்கொள்ளுமா?

மாண்புமிகு திரு. எஸ். டி. சோமசுந்தரம் : பேரவைத் தலைவர் அவர்களே, தனியார் அவர்கள் மீது வழக்கைப் போட்டிருக்கிறார்கள். அதனால், அது நீடித்த வழக்காக தள்ளிக்கொண்டே வருகிறது. அவர்கள்தான் அதை முடித்துக் கொள்ளவேண்டும் என்பதைத் தெரிவித்துக் கொள்கிறேன்.

திரு. பி. ஈஸ்வரமூர்த்தி என்கிற சொரணம் : பேரவைத் தலைவர் அவர்களே, அமைச்சர் அவர்கள் பதில் சொல்லுகின்றபோது தனியார் கேஸ் போட்டிருப்பதால், அவர்கள் பார்த்துக் கொள்வார்கள் என்று சொல்வது சரியா என்பதைத் தெரிவிக்க வேண்டுமென்பதோடு, இனாம் ஒழிப்புப் சட்டம் தமிழக அரசால் 1965 ஆம் ஆண்டிலே கொண்டுவரப்பட்டு, அதற்குப் பிறகு மூன்று அரசாங்கங்கள் மாறி விட்டது. 65-லிருந்து இப்போது 17 ஆண்டு காலம் கழித்துக்கூட, அரசு போட்ட சட்டத்தை சிவந்திபுரம், கோடளங்குளம் மக்கள் அனுபவிக்க முடியாத ஒரு நிலைமை ஏற்பட்டிருக்கிறது. ஆகவே, அரசே விசேஷ சிரத்தை எடுத்து, அந்தச் சட்டத்தை அமுல்படுத்துவதற்கான முயற்சியை மேற்கொள்ளுமா?

1982 மார்ச் 12]

மாண்புமிகு திரு. எஸ். டி. சோமசுந்தரம் : பேரவைத் தலைவர் அவர்களே, இந்தச் சட்டம் எடுத்துக்கொள்ளப்பட்டது 65-ல். 1965ஆம் ஆண்டு ஏப்ரல் மாதம் 15ஆம் நாளில் சில நிலங்கள் அவர்களுக்குப் பட்டா செய்து கொடுக்கப்பட்டன. ஆனால் மற்றவர்கள் அனுபவித்துக் கொண்டு, இன்றைக்கு வழக்குப் போடப்பட்டுள்ளது. இந்த வழக்கில் அரசு எந்த அளவுக்குத் தலையிட முடியும் என்று கேட்டிருக்கிறீர்கள். நான் அதைப்பற்றி சட்டத் துறையிடம் ஆலோசனை செய்து, எந்த அளவுக்கு தலையிட முடியுமோ அந்த அளவுக்குத் தலையிட இந்த அரசு முயற்சி செய்யும்.

திரு. சோ. அழகர்சாமி : பேரவைத் தலைவர் அவர்களே, இந்த இனாம் ஒழிப்புச் சட்டத்தின் விதிகள் என்ன கூறுகிறது என்று சொன்னால், அந்தச் சட்டத்தை நிறைவேற்றி அமுலாக்குவதன் மூலமாக அந்த நிலத்தில் யார் யார் சாகுபடி செய்து கொண்டிருந்தார்களோ அவர்களுக்கு ரயத்துவாரி பட்டா கொடுக்க வேண்டும் என்று சொல்லப்பட்டிருக்கிறது. ஆனால், அந்த இனாம்தார்கள் அதிலே தாங்கள் சாகுபடி செய்ததாக ஒரு பொய்யான ரிக்கார்டுகளை, தவறான ரிக்கார்டுகளைக் காட்டியதன் காரணமாக, அதற்கு நம் ரெவின்யூ அதிகாரிகள் சாதகமாகச் சொல்லக்கூடிய தகவல்களின் காரணமாகத்தான், இவ்வளவு ஆண்டுக் காலமாக 10, 12 ஆண்டுகள் ஆகியும், இதற்கான சட்டம் நிறைவேற்றப்பட்டும்கூட, அந்த விவசாயிகளுக்குப் பட்டா கொடுக்காமல், அதன் உரிமையை அடைய முடியாமல் இருக்கிறார்கள். ஆகவே ஒரு சரியான திருத்தத்தை இந்தச் சட்டத்திற்குக் கொண்டு வந்து ஏழை விவசாயிகள் பலன் அடைவதற்கு அமைச்சர் அவர்கள் வகை செய்வார்களா என்பதை அறிய விரும்புகிறேன்.

மாண்புமிகு திரு. எஸ். டி. சோமசுந்தரம் : மாண்புமிகு தலைவர் அவர்களே, சட்டத்திலே இருக்கிற சிக்கல்களினால் பலன் கிடைக்கவில்லை என்று மாண்புமிகு உறுப்பினர் தெரிவித்தார்கள். சட்டத்தில் சிக்கல் இருந்தால் திருத்துவதற்கு அரசு தயாராக இருக்கிறது என்பதைத் தெரிவித்துக் கொள்கிறேன்.